செ.கு.எண் 18 நாள்: 09.01.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.1.2012

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், மயிலம்பாடி கிராமம், கண்ணடிபாளையத்தைச் சேர்ந்த திரு. ஈஸ்வரன் என்பவரின் மகன்கள் சிறுவன் கோகுல் மற்றும் சிறுவன் வினோத் மற்றும் அதே ஊரைச் சேர்ந்த திரு. சதாசிவம் என்பவரின் மகன் சிறுவன் மோகன்ராஜ் ஆகிய மூவரும் 8.1.2012 அன்று கண்ணடிபாளையம் ஏரியில் விளையாடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த சிறுவர்கள் கோகுல், வினோத் மற்றும் மோகன்ராஜ் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9